**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 29.08.2023ஆம் நாளன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்**

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த 5 ஆண்டுகளாக உள்ளாட்சி பிரதிநிதிகளே இல்லாமல் இருந்த நிலையில் தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற பின்னர் அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், உள்ளாட்சி தேர்தல் நடத்தி, அதில் பெண்களுக்கான இடஒதுக்கீடு கொடுத்து, நம்மை எல்லாம் இந்நகர்மன்ற கூட்டத்தில் உள்ளாட்சி பிரதிநிதிகளாக அமரச்செய்து, பொதுமக்களின் பிரச்சனைகைளை நாள்தோறும் தீர்த்து வைக்க இப்பொறுப்பில் அமர்த்தி உள்ளார்கள். நாம் அனைவரும் எந்தவித ஊதியமும் பெறாமல், நகர்மன்ற கூட்டம் நடைபெறும் போது அமர்வு படியாக ரூ.600/- மட்டும் பெற்றுக்கொண்டு மக்கள் பணியை ஆற்றி வந்தோம். இந்நிலையில், நம் அனைவருக்கும் தித்திக்கும் தேனாய், மக்கள் பணி செய்ய ஊக்கமருந்தாய், உள்ளாட்சி பிரதிநிதிகளில், நகர்மன்ற தலைவருக்கு ரூ.15,000/-ம், நகர்மன்ற துணைத்தலைவருக்கு ரூ.10,000/-ம் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு தலா ரூ.5,000/-யும் மதிப்பூதியம் வழங்கி எங்கள் மதிப்பினை கூட்ட செய்த தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் சார்பில் கோடான கோடி நன்றியினை இந்நகர்மன்ற கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், இந்த அறிவிப்பு வரலாற்று சிறப்பு மிக்கதாகவும், மக்கள் பணியாற்றுவதற்கு உந்து சக்கியாகவும் இருக்கும் என்பதை இந்த நகர்மன்ற கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**தீர்மான எண் : 130**

**தீர்மானம் : பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.01**

ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை மேம்படுத்துதல் பணிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021-22ன் கீழ் ரூ.359.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியதன் பேரில், தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

இந்நிலையில் மேற்படி சந்தை திறந்தவெளியாக இருப்பதால் வெளியாட்கள் அனுமதியின்றி நுழைந்து அசுத்தம் செய்ய வாய்ப்புள்ளதால் மேற்கண்ட சந்தையை சுற்றிலும் சுற்றுச்சவர் மற்றும் கம்பிவேலி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1146/2021/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை பொது நிதி 2023-2024ன் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் : 131**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.02**

மாண்புமிகு வீட்டு வசதி துறை அமைச்சர் அவர்கள் அளித்த ஆலோசனையின் அடிப்படையிலும், இந்நகராட்சி நகர்மன்ற உறுப்பினர்களிடம் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தின் அடிப்படையிலும், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்டசர்வே எண்.45/1—ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 15 கடைகளுக்கு தற்காலிக செட் அமைக்க கடந்த 21.06.2023 அன்று நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தில் தீர்மான எண்.129—ன் படி அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது மேற்படி பணிக்கு மேற்கூரை அமைக்கவும், கடைகளை சுற்றிலும் தகர தடுப்பு அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டை விட ரூ.4.00 இலட்சம் கூடுதலாக ஏற்படுகிறது. எனவே மேற்படி கூடுதல் செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2074/2022/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதி 2023—24ல் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண் : 132**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.03**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2023—2024ன் கீழ் புன்செய்ப் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, சர்வே எண்.45/1—ல் மாட்டிறைச்சிகடைகளுக்கான தற்காலிக செட் அமைத்தல் பணிக்காக 12.07.2023 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, சர்வே எண்.45/1—ல் மாட்டிறைச்சிகடைகளுக்கான தற்காலிக செட் அமைத்தல் பணி | 8.00 இலட்சம் | திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.22% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.சி.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 1.27% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.22% குறைவாக வழங்கியுள்ள திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2074/2022/எச்1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 133**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.04**

புன்செய்ப் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் பணிக்காக 16.05.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் பணி | M/s.Annai Catering, Sathyamangalam. | 0.39% மதிப்பீட் டை விட குறைவு |
| | | M/s.KING CATERING, Sathyamangalam. | 96.85% மதிப்பீட் டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.39% குறைவாக வழங்கியுள்ள M/s.Annai Catering, Sathyamangalam அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.428/2023/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 134**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.05**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2023–2024ன் கீழ் புன்செய்ப் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் நீரேற்று நிலையத்திற்கு ஒரு வருடத்திற்கு தேவையான குளோரின் கேஸ் சிலிண்டர் விநியோகம் செய்தல் பணிக்காக 28.07.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் நீரேற்று நிலையத்திற்கு ஒரு வருடத்திற்கு தேவையான குளோரின் கேஸ் சிலிண்டர் விநியோகம் செய்தல் பணி | 4.00 இலட்சம் | I Tech System, Erode | 0.11% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | Compan International Pvt Ltd, Erode | 1.06% மதிப்பீட் டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.11% குறைவாக வழங்கியுள்ள M/S. I Tech System, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.432/2023/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 135**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.06**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகளுக்கு ரூ.5207.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டப்பணிகள் நடைபெறும் பொழுது பணிகளை கண்காணிக்க போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், மேலும் குடிநீர் குழாய் பதிக்கும் முன்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் உரிய பரிசோதனை செய்ய மாதிரிகள் கோவையில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு கொண்டு செல்ல போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், மேலும் கட்டுமான பணிகள் மேற்கொள்ள கான்கிரீட் பரிசோதனை (CUBE TEST) மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததாலும், தற்பொழுது இந்நகராட்சியில் ஒரு பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் மட்டுமே உள்ளதாலும், திட்டப்ணியை விரைவில் முடிக்கவும், திட்ட மேலாண்மை ஆலோசகர் (PROJECT MANAGEMENT CONSULTANT) அமைக்க அரசு முதன்மை செயலாளர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்ததற்கு இணங்க, இப்பணியின் முக்கியத்துவம் கருதியும், உரிய காலக்கெடுவிற்குள் பணியை முடிக்கவும், திட்ட மேலாண்மை ஆலோசகர் (PROJECT MANAGEMENT CONSULTANT) நியமிக்க பணிக்காக 30.05.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகளுக்கு திட்ட மேலாண்மை ஆலோசகர் (PROJECT MANAGEMENT CONSULTANT) நியமித்தல் பணி | 92.00 இலட்சம் | Redd hi Stregnth Steel, Perambalur | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | Harshini Enterprises, Trichy | 34.94% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.01% குறைவாக வழங்கியுள்ள Redd hi Stregnth Steel, Perambalur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1299/2020/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 136**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.07</u>**

இந்நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் தினமும் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகள் அனைத்தும் வாரச்சந்தை வளமீட்பு மையத்தில் (RRC) சேகரிக்கப்பட்டு அவ்வப்போது சிமெண்ட் ஆலைகளுக்கு NGO மூலம் லாரிகளில் அனுப்பப்பட்டு மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தி அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் NGO மூலம் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்படும் பணி கடந்த 27.03.2023 ஆம் தேதியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. இதனால் வளமீட்பு மையம் முழுவதும் பிளாஸ்டிக் கழிவுகள் நிறைந்து இனிவரும் நாட்களில் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து வைக்க இயலாத அளவில் வளமீட்பு மையம் நிறைந்து உள்ளது. எனவே NGO மூலம் மீண்டும் வாகனங்கள் இப்பணிக்கு அனுப்பும் வரை நகராட்சி மூலம் லாரிகளை வாடகைக்கு எடுத்து பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1050/2023/எச்1)**

**அலுவலகக் குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொது நிதி 2023-24ல் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 137**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.08</u>**

இந்நகராட்சி அம்மா உணவகத்தில் வழங்குவதற்காக விநியோகிக்கப்படும். டோக்கன் புத்தகம் இருப்பு இல்லாத காரணத்தால் அம்மா உணவகத்தில் தயிர்சாதம் மற்றும் சாம்பார் சாதங்களுன்காக விநியோகிக்கப்படும் டோக்கன் 200 புத்தகம் தேவைப்படுவதால் The Erode Dist printers Indl Co. ஈரோடு டோக்கன் புத்தகம் அச்சடித்து வழங்கவும் அதற்கான செலவீனத்தொகையினை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.530/2016/அ2)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)அவசர அவசியம் கருதி மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 138**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.09</u>**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண்.471/2022/அ2 நாள்.06.03.2023ன்படி 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.30,000/- மற்றும் ந.க.எண்.399/2023/அ2 நாள்.06.07.2023 ன்படி 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.30,000/- மொத்தம் ரூ.60,000/- நகராட்சிகளின் வருடாந்திர பங்களிப்புத் தொகை செலுத்துமாறு கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே

வருடாந்திர பங்களிப்புத் தொகை இரண்டு ஆண்டிற்கு சேர்த்து மொத்த தொகை ரூ.60,000/- க்கான வரைவோலை எடுத்து தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களுக்கு செலுத்த நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.472/2023/சி1)**

**அலுவலகக்குறிப்பு** :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 139**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.10</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு 2023-2024ம் ஆண்டிற்கு தேவையான பதிவேடுகள் படிவங்கள், எழுது பொருட்கள், A4 மற்றும் Legal Paper, M.book, Birth and Death Form மற்றும் இதர பொருட்கள் போன்றவற்றை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வாங்கி கொள்ள உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1568/2022/சி1)**

**அலுவலகக் குறிப்பு:**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 140**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.11</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் 2020- 2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளில் நகராட்சி குத்தகை இனமான கடைகள், தினசரி சந்தை, வாரச்சந்தை, இரு சக்கரம்/ நான்கு சக்கர வாகனம் நிறுத்தம் இடம் மற்றும் கட்டணக் கழிப்பிடங்கள் ஆகிவற்றிக்கு கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு அரசு அறிவுறுத்தலின்படி, மூடப்பட்ட மேற்கண்ட இனங்களுக்கு அரசாணை எண்.337 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறை நாள். 16.06.2023ன்படி 2020-2021க்கு 01.06.2020 முதல் 31.08.2020 வரை (முதலாவது அலை தொற்று காலம்) மற்றும் 2021- 2022ஆம் ஆண்டிற்கு 01.05.2021 முதல் 30.06.221 வரை (இரண்டாவது அலை தொற்று காலம்) குத்தகை இனங்களுக்கு வாடகையினை தள்ளுபடி செய்து வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கு மேல் நடவடிக்கைக்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1308/2020/அ1 )**

**அலுவலகக்குறிப்பு :-**

மன்றம் அரசாணையை பார்வையிட்டு மேல் நடவடிக்கைக்கு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 141**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.12</u>**

ஈரோடு மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான நிலங்கள், நகராட்சி அலுவலகம், நகராட்சிக்கு சொந்தமான சாலைகள், பேருந்து நிலையம், சந்தை, பள்ளிக்கூடங்கள், அங்கான்வாடி மையங்கள், பொது கழிப்பிடங்கள், குடிநீர் மேல்நிலை தொட்டிகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காக்கள், பொது ஒதுக்கீட்டு இடங்கள், ஆகியவற்றை நகராட்சி ஆணையாளர் புன்செய்ப் புளியம்பட்டி என்ற பெயரில் உட்பிரிவு செய்து பெயர் மாற்றம் செய்து தனிப்பட்டா வழங்கிடவும் கீழ்காணும் பட்டியலில் உள்ள இனங்களுக்கு

| வ. எண் | சொத்துகளின் பெயர் | தெருவின் பெயர் | சொத்துகளின் விவரம் | கட்டி முடிக்கப்பட்ட வருடம் |
|---|---|---|---|---|
| 1 | மேல்நிலை நீர் தேக்க தொட்டி | அண்ணாநகர் | மேல்நிலை நீர் தேக்க தொட்டி | 2016 |
| 2 | கிணறு | அண்ணாநகர் | திறந்தவெளி கிணறு | 1978 |
| 3 | மேல்நிலை நீர் தேக்க தொட்டி | செங்குந்தபுரம் கிழமேல் வீதி | மேல்நிலை நீர் தேக்க தொட்டி | 1984 |
| 4 | கிணறு | செங்குந்தபுரம் கிழமேல் வீதி | திறந்தவெளி கிணறு மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 1985 |
| 5 | கிணறு | குமரன் வீதி | திறந்தவெளி கிணறு | 1980 |
| 6 | மேல்நிலை நீர் தேக்க தொட்டி | காமட்சியம்மன் கோவில் வீதி | மேல்நிலை நீர் தேக்க தொட்டி | 2016 |
| 7 | கிணறு | பன்னீர் செல்வம் வீதி | திறந்தவெளி கிணறு மற்றும் டேங்க் | 2012 |
| 8 | கிணறு | பன்னீர் செல்வம் வீதி | கிணறு | 2012 |
| 9 | கிணறு | வினோபா வீதி | கிணறு | 1968 |
| 10 | கிணறு | சுல்தான் வீதி | திறந்தவெளி கிணறு | 1965 |
| 11 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | மறைமலையடிகள் வீதி | திறந்தவெளி கிணறு மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 1966 |
| 12 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | சௌடம்மன் கோவில் | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 2015 |
| 13 | கழிவறை | சௌடம்மன் கோவில் | மகளிர் கழிவறை | 2000 |
| 14 | கிணறு | S.R.T பின்புறம் வீதி | திறந்தவெளி கிணறு மற்றும் டேங்க் | 1975 |
| 15 | தலைமை நீரேற்று நிலையம் | பவானிசாகர் | தலைமை நீரேற்று நிலையம் | 2003 |
| 16 | தலைமை நீரேற்று நிலையம் | பவானிசாகர் | RAW WATER PUMP HOUSE | 2003 |
| 17 | விளையாட்டு திடல் | தில்லை நகர் | விளையாட்டு திடல் | 0 |
| 18 | பூங்கா | தில்லை நகர் | காலியிடம் | |
| 19 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | மறைமலையடிகள் வீதி | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 2000 |
| 20 | கிணறு | மறைமலையடிகள் வீதி | திறந்தவெளி கிணறு | 1972 |
| 21 | கிணறு | மறைமலையடிகள் | திறந்தவெளி கிணறு | 1975 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வீதி | | |
| 22 | கிணறு | ராஜாஜீ வீதி | ஆழ்துளை கிணறு | 1985 |
| 23 | மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | ராஜாஜீ வீதி | மேல்நிலைநீர் தேக்க தொட்டி | 2013 |
| 24 | கழிவறை | அண்ணாநகர் வீதி | கழிவறைகள் | 2021 |
| 25 | அங்கன்வாடி | ராஜாஜீ வீதி | அங்கன்வாடி கட்டிடம் | 2000 |
| 26 | கிணறு | ஆசாத் வீதி | திறந்தவெளி கிணறு மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 1972 |
| 27 | கிணறு | பாரதி வீதி | திறந்தவெளி கிணறு மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 1975 |
| 28 | கிணறு | கெம்பண்ணா வீதி | திறந்தவெளி கிணறு மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 1966 |
| 29 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | தாகூர் இணைத்தெரு | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 2008 |
| 30 | கிணறு | மறைமலையடிகள் வீதி | திறந்தவெளி கிணறு | 2000 |
| 31 | கிணறு | சுப்பராயலு வீதி | ஆழ்துளை கிணறு மற்றும் காலியிடம் | 0 |
| 32 | பூங்கா | நம்பியூர் ரோடு (திருமலை கார்டன்) | காலியிடம் | |
| 33 | கழிவறை | காந்தி நகர் கிழமேல் தெரு | ஆண்கள் கழிவறை | 2017 |
| 34 | பூங்கா | நாவலர் வீதி (சக்தி நகர்) | காலியிடம் | |
| 35 | கழிவறைகள் | காந்திநகர் புதுக்காலனி | கழிவறைகள் | 2017 |
| 36 | கிணறு | S.R.T பின்புறம் | திறந்தவெளி கிணறு டேங்க் | 2013 |
| 37 | பேருந்து நிலையம் | தங்கசாலை வீதி | பேருந்து நிலையம் | 2013 |
| 38 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | காந்தி நகர் தென்வடல் தெரு | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 1978 |
| 39 | கிணறு | தங்கசாலை | திறந்தவெளி கிணறு | 1965 |
| 40 | கிணறு | தங்கசாலை வீதி சத்திரம் ரோடு | திறந்தவெளி கிணறு | 1978 |
| 41 | கிணறு | காந்தி நகர் கிழமேல் வீதி | திறந்தவெளி கிணறு மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 1960 |
| 42 | அங்கன்வாடி | காந்தி நகர் புதுக்காலனி | அங்கன் வாடி கட்டிடம் | 2015 |
| 43 | அங்கன்வாடி | காந்தி நகர் மேற்கு வீதி | அங்கன்வாடி கட்டிடம் | 2016 |
| 44 | கிணறு | காந்திநகர் மேற்கு வீதி | திறந்தவெளி கிணறு மேல் | 1985 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிலை நீர்தேக்க தொட்டி | |
| 45 | கிணறு | அவினாசி ரோடு | திறந்தவெளி கிணறு | 1979 |
| 46 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | அவினாசி ரோடு | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 1978 |
| 47 | கழிவறைகள் | அவினாசி ரோடு | கழிவறை | 2000 |
| 48 | கழிவறைகள் | தோட்டச்சாலை | அம்மன் நகர் ஆண்கள் கழிவறை | 2016 |
| 49 | கழிவறைகள் | தோட்டச்சாலை | அம்மன் நகர் பெண்கள் கழிவறை | 2016 |
| 50 | பூங்கா | தோட்டச்சாலை (திருமால் நகர்) | காலியிடம் | |
| 51 | அங்கன்வாடி | S.R.T பின்புறம் | அங்கன்வாடி கட்டிடம் | 2012 |
| 52 | நீருந்து நிலையம் | அண்ணாநகர் | நீருந்து நிலையம் | 2002 |
| 53 | பூங்கா | கண்ணகி வீதி | காலியிடம் | |
| 54 | கழிவறைகள் | ஜவகர் வீதி | பேருந்து நிலையம் | 2015 |
| 55 | பூங்கா | அண்ணாமலையார் நகர் | காலியிடம் | |
| 56 | கிணறு | ஜவகர் வீதி | திறந்தவெளி கிணறு | 1980 |
| 57 | நகராட்சி அலுவலகம் | ஜவகர் வீதி | அலுவலக கட்டிடம் | 1970 |
| 58 | வணிக வளாகம் | ஜவகர் வீதி | மெயின்ரோடு கடைகள் | 2005 |
| 59 | வணிக வளாகம் | திரு,விக.வீதி | வணிக வளாகம் | 2000 |
| 60 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | நேதாஜீ வீதி | டேங்க் | 2012 |
| 61 | வாரச்சந்தை | காயிதேமில்லத் வீதி | காலியிடம் | |
| 62 | கழிவறை | திரு.வி.க வீதி | திரு.வி.க கார்னர் | 1996 |
| 63 | பூங்கா | ஜவகர் வீதி (நகராட்சி பூங்கா) | காலியிடம் | |
| 64 | பூங்கா | சேரன் வீதி (திருமகள் நகர்) | காலியிடம் | |
| 65 | கழிவறை | காயிதே மில்லத் வீதி | வாரச்சந்தை கழிவறை | 2018 |
| 66 | கழிவறை | சேரன் வீதி | சேரன் வீதி பொதுக்கழிப்பறை | 2013 |
| 67 | வணிக வளாகம் | மறைமலையடிகள் வீதி | கட்டிடம் | 2015 |
| 68 | RRC CENTER | காயிதேமில்லத் வீதி | கட்டிடம் | 1980 |
| 69 | MCC | காயிதேமில்லத் வீதி | கட்டிடம் | 2019 |
| 70 | ஆடு வதைகூடம் | காயிதேமில்லத் வீதி | கட்டிடம் | 2015 |
| 71 | தரைமட்டத் தொட்டி | ஜே,ஜே நகர் தென்வடல் தெரு | தரைமட்டத் தொட்டி அண்ணமார் கோவில்வீதி | 1996 |
| 72 | அங்கன்வாடி | ஜே,ஜே நகர் தென்வடல் தெரு | கட்டிடம் | 2007 |
| 73 | மேல்நிலை | திரு,வி,க வீதி | மேல்நிலை நீர்தேக்க | 1974 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நீர்தேக்க தொட்டி | | தொட்டி | |
| 74 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | ஜே,ஜே நகர் தென்வடல் தெரு | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 2016 |
| 75 | கழிவறை | ஜே,ஜே நகர் கிழமேல் தெரு | கட்டிடம் | 2017 |
| 76 | கழிவறை | ஜே,ஜே நகர் தென்வடல் தெரு | கட்டிடம் | 2017 |
| 77 | பூங்கா | இந்திரா நகர் (லட்சுமி நகர்) | காலியிடம் | 0 |
| 78 | தினசரி சந்தை | தங்கசாலை வீதி (சத்திரம் ரோடு) | காலியிடம் | |
| 79 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | இந்திரா நகர் | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 2018 |
| 80 | கழிவறைகள் | காந்தி நகர் தென்வடல் தெரு | பெண்கள் கழிவறை | 2017 |
| 81 | சமுதாயக் கூடம் | காந்தி நகர் கிழமேல் தெரு | சமுதாய கூடம் மண்டபம் | 1990 |
| 82 | அம்மா உணவகம் | தங்கசாலை வீதி | சத்திரம் ரோடு | 2015 |
| 83 | CREMETORIUM | காந்தி நகர் புதுக்காலனி | யாத்ரா கட்டிடம் | 2005 |
| 84 | தலைமை நீரேற்று நிலையம் | மறைமலையடிகள் வீதி | கட்டிடம் பவானிசாகர் | 1971 |
| 85 | நீருந்து நிலையம் | மறைமலையடிகள் வீதி | நகராட்சி நீருந்து நிலையம் | 2008 |
| 86 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | தோட்டச்சாலை | கட்டிடம் | 1985 |
| 87 | சமுதாய கூடம் | காயிதேமில்லத் | கட்டிடம் | 2006 |
| 88 | மேல்நிலைத் தொட்டி | சேரன் வீதி | மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 2000 |
| 89 | அங்கன்வாடி | இந்திரா நகர் | கட்டிடம் | 2000 |
| 90 | பூங்கா | காந்தி நகர் மேற்கு வீதி | காலியிடம் | |

மேற்கண்ட இனங்களை **"ஆணையாளர், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி"** என பெயர் மாற்றம் செய்யுவும் இணைய வழி பணியினை ஸ்ரீ ராமா புரோமோட்டர்ஸ் நிறுவனத்தின் மூலமாக மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.955/2023/எப்1)**

**அலுவலகக் குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொது நிதி 2023-2024-ல் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 142**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.13**

ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு வீடு வீடாக சென்று குப்பைகள் சேகரிக்க பேட்டரியால் இயங்கும் வாகனம் (BATTERY OPERATED VEHICLE) பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் 5 பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் உள்ள பேட்டரிகள் பழுதாகி வண்டியை இயக்க இயலாத நிலையில் உள்ளதாக திரு.சுப்பிரமணியன் மற்றும் திரு.ஆனந்தகுமார், மேற்பார்வையாளர்கள் கடிதம் வழங்கியுள்ளார்கள். மேலும் 5 வாகனங்களின் சார்ஜர்கள் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே பொது சுகாதார பணியின் அவசியம் கருதி சார்ஜருடன் கூட புதிய பேட்டரிகள் 5 எண்ணிக்கையும், மேலும் உபயோகிக்க இயலாத சார்ஜர்களுக்கு மாறாக 5 புதிய சார்ஜர்களும் வாங்கவும், மற்றும் இதர உதிரி பாகங்கள் பொருத்தவும் ஆகும் செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.881/2023/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதி 2023–2024ல் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் : 143**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.14**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட நம்பியூர் ரோட்டு க.ச.எண்.160/1–ல் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான மயான இடத்தில் நவீன எரியூட்டு மயானம் (யாத்ரா) அமைத்து பராமரித்திட புன்செய்ப் புளியம்பட்டி நவீன எரியூட்டுமிட அறக்கட்டளையுடன் 06.10.2010ஆம் தேதியன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற சமுதாய நோக்கத்தோடு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் **"புன்செய்ப் புளியம்பட்டி நவீன எரியூட்டுமிட அறக்கட்டளை"** தங்களது சொந்த செலவில் கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டு 2013–2014ஆம் ஆண்டில் மேற்படி கட்டிட பணிகள் முடிக்கப்பட்டு, 2014–2015ஆம் ஆண்டு முதல் தற்போது வரை நல்ல முறையில் இயக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகிறது. மேலும், ஒப்பந்த காலமானது 05.08.2023ஆம் தேதியுடன் முடிவடைய உள்ள நிலையில் ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்து தருமாறு தற்போது வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின் படியும், புன்செய்ப் புளியம்பட்டி நவீன எரியூட்டுமிட அறக்கட்டளை சார்பில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், பெருந்துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அனைத்தும் நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ள காரணத்தாலும் மற்றும் நவீன எரியூட்டு மயானம் (யாத்ரா) பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் செயல்படுவதாலும், மேலும் கடந்த காலங்களில் அன்னூர், சிறுமுகை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து பெருமளவில் சடலங்கள் வரப்பெற்று வந்த நிலையில் தற்போது அன்னூரில் புதிதாக எரியூட்டு மின்மயானம் உருவாக்கப்பட்டுள்ளதால் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் உள்ள மின் மயானத்திற்கு வரப்படும் சடங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதால் புன்செய்ப் புளியம்பட்டி நவீன எரியூட்டுமிட அறக்கட்டளைக்கு மேலும் 3 ஆண்டிற்கு (06.08.2023 முதல் 05.08.2026 வரை) புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், மேலும் ஒரு சடலத்திற்கு ரூ.100.00 செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.134/2017/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த நீட்டிப்பு செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 144**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.15**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2023-2024ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் புதிதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தையை சுற்றிலும் சுற்றுச்சவர் மற்றும் கம்பிவேலி அமைத்தல் பணிக்காக 18.08.2023 அன்று இரண்டாம் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் புதிதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தையை சுற்றிலும் சுற்றுச்சவர் மற்றும் கம்பிவேலி அமைத்தல் பணி | 20.00 இலட்சம் | M/s.AKILA CONSTRUCTIONS, ERODE | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே |
| | | | M/s.HARIRAM CONSTRUCTIONS, ERODE | 0.63% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே வழங்கியுள்ள M/s.AKILA CONSTRUCTIONS, ERODE அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1146/2021/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 145**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.16**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் சுற்றுவட்டார பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தினசரி சந்தை (Daily Market) ஜவகர் மெயின் சாலையில் வார்டு-16. சந்தை அமைக்க புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களால் 20.01.2022ம் அரசாணை எண்.15 தேதியன்று சட்டப்பேரவையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ள அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-2022 மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.359.85 இலட்சத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தலைமை பொறியாளர் அவர்களிடம் ந.க.எண்.001/2022/டிஓ1, நாள்.05.01.2022ன் படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு கடந்த 22.03.2022 அன்று பணியாணை வழங்கப்பட்டு தற்போது கட்டுமானபணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. எனவே,

கீழ்க்கண்ட நிலவரப்படி தினசரி சந்தையில் உள்ள கடைகள் மற்றும் தினசரி சந்தையில் மாத வாடகை அடிப்படையில் உள்ள கடைகளின் விபரம்:

**ஆண்டு உரிம இனம் விபரம்**

| வ. எண் | உரிமங்களின் பெயர் | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை(வங்கி வரைவோலையாக) அல்லது அதற்கு ஈடான தேவியமயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று | ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய (ஏல முன் வைப்புத் தொகை நீங்களாக) | வருமான வரிச் சட்டத்தின் படி செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் GST வரி |
|---|---|---|---|---|---|
| 1 | தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், தினசரி சந்தைக்குள் உள்ள 10X10 அளவிலான 192 கடைகள் மற்றும் நகராட்சி எல்லைக்குள் விற்பனைக்கு கொண்டு வரும் பொருட்களும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.5,00,000/- | 15,00,000/-க்கு சொத்து மதிப்பு சான்று அல்லது கூடுதல் வைப்புத்தொகையாக ரூ.5,00,000/- | உரிம தொகை முழுவதும் | 2% IT<br>18% GST |
| 2 | தினசரி சந்தையில் உள்ள ஆண்கள் கழிப்பிடம் -1 மற்றும் பெண்கள் கழிப்பிடம் -1 கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.50,000/- | ரூ.50,000/- | உரிம தொகை முழுவதும் | 2% IT<br>18% GST |
| 3 | தினசரி சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள 11.50x42.25 அளவுள்ள கேண்டின் குத்தைகை | ரூ.50,000/- | ரூ.50,000/- | உரிம தொகை முழுவதும் | 2% IT<br>18% GST |

மேற்படி உள்ள தினசரி சந்தைக்கு ஓர் ஆண்டு உரிம இனம் அரசாரணை நிலை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008 மற்றும் அரசாணை.92 நாள்.03.07.2007ன் படியும் நகராட்சி குத்தகை ஏல நிபந்தனைகளின் படி 01.04.2023 முதல் தினசரி சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமமான ஓர் ஆண்டு உரிமத்தையும் தினசரி சந்தையில் உள்ள ஆண்கள் கழிப்பிடம் -1 மற்றும் பெண்கள் கழிப்பிடம் -1, தினசரி சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள 192

கடைகள் மற்றும் தினசரி சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கேண்டின் ஆகியவற்றினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடவும் அதற்கு உண்டான வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை பட்டியலில் உள்ள படி நிர்ணயம் செய்யவும் மேலும் பொதுப்பணித்துறை வகுத்த மதிப்பீட்டுத்தொகை 10X10 அளவுள்ள கடை நாள் ஒன்றிற்கு ரூ.149.67 வீதம் 192 கடைகளுக்கு மொத்தமாக ஏலம் கோரவும் மற்றும் புதிதாக கட்டப்பட்டுள்ள 11.50x42.25 அளவுள்ள கேண்டின் மாதம் ரூ.24,727/– அரசு மதிப்பாக நகராட்சி பொறியாளரால் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஏலம் கோரவும், விளம்பரம் மற்றும் பொது ஏல நிபந்தனைகளை அச்சிட ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.825/2023/அ1)**

**அலுவலகக் குறிப்பு**

அ) 2023–24ம் ஆண்டிற்கு தினசரி சந்தையினை புதிதாக கட்டணம் நிர்ணயம் செய்து ஏலம் விடுவதற்கு வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை நிர்ணயம் செய்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) கடந்த 21.06.2023 அன்று நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தில் தீர்மான எண்.81–ல் புதிதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தைக்கு ஏல முன்வைப்புத்தொகை மற்றும் பிற நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

இ) இதற்கான செலவுகள் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) பொதுப்பணித்துறை வகுத்த மதிப்பீட்டின் அடிப்படையில் இந்நகராட்சி பொறியாளரால் நிர்ணம் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஏலம் கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 146**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.17</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண்.03, 04, 07, 13, 14, 16 மற்றும் 17 ஆகிய வார்டுகளில் உப்புத்தண்ணீர் குழாய் விஸ்தரிப்பு செய்ய ஆகும் செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1094/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதி 2023–2024ல் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் : 147**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**(ஒம்)திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**//உண்மைநகல் உத்தரவுப்படி//**

**ஆணையாளர்(கூ.மு.பொ)**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**